**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 424 of 2025

Depositions of PW -1 witness for ________ { Prosecution / Defence / Court

Name : தாமஸ்

Father's Name :பவுலோஷ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th **day of February** 2026.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் பாகுபாச பிரிவு 355 ன் படி மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் சூலூர், காங்கேயம் பாளையம், ஏர்போர்ஸ் காலனியில் குடியிருந்து கொண்டு ஹோட்டல் வைத்து நடத்தி வருகிறேன். சம்பவத்தில் இறந்துபோன லாரன்ஸ் எனது உறவினர். தேதி, மாதம் மற்றும் வருடம் ஞாபகம் இல்லை. சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக இரவு சுமார் 09.00 மணியளவில் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு எனது ஸ்கூட்டரில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்ற பொழுது லாரன்ஸ் அவரது சைக்கிளில் KMCH மருத்துவமனை அருகில் தெற்கிலிருந்து வடக்காக ரோட்டை கடந்து இடதுபுறம் சென்ற பொழுது மேற்கிலிருந்து கிழக்காக வந்த இருசக்கர வாகனம் லாரன்ஸ் சைக்கிளின் மீது மோதி சைக்கிள் தூக்கி எறியப்பட்டு டிரான்ஸ்பார்மரில் மோதி கீழே விழுந்தார்.

2. சம்பவத்தின் பொழுது மோட்டார் சைக்கிளில் மூன்று நபர்கள் பயணம் செய்து வந்தார்கள். லாரன்ஸ் அவர்களுக்கு பின் தலை மற்றும் உடல் முழுவதும் சிறாய்ப்பு காயங்கள் இருந்தது. லாரன்ஸ் அவர்களை KMCH மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். KMCH

மருத்துவமனையில் பெரிய தொகை செலவாகும் என்பதால் கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். பின்னர் அவரை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்து நான் வந்து விட்டேன். பின்னர் அதிகாலை அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். பின்னர் இது சம்பந்தமாக விபத்து ஏற்படுத்திய நபர் மீது புகார் காவல் நிலையத்தில் அளித்தேன்.

3. என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். புகாரை போலீசார் எழுதினார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் தற்போது ஞாபகம் இல்லை. இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவரை பார்த்தால் என்னால் அடையாளம் கூற இயலும். ஆனால் சரிவர ஞாபகம் இல்லை. மேலும் லாரன்ஸ் பிரேதத்தின் மீது போலீசார் பிரேத விசாரணை மேற்கொண்ட பொழுது உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. பொதுவாக எங்கள் கடை எத்தனை மணிக்கு திறந்து எத்தனை மணிக்கு மூடுவோம் என்றால் காலை சுமார் 06.00 மணிக்கு திறந்து இரவு 08.30 அல்லது 09.00 மணி வரை கடை இருக்கும். சம்பவம் ஆனது KMCH மருத்துவமனைக்கு முன்பாக நடைபெற்றது. லாரன்ஸ் சைக்கிளில் சென்று முதலில் டிரான்ஸ்பார்மரில் மோதி கொண்டார் என்றால் சரியல்ல, இருசக்கர வாகனம் மோதியதால் லாரன்ஸ் சைக்கிளுடன் டிரான்ஸ்பார்மரில் மோதினார். KMCH மருத்துவமனையில் இருந்து ட்ரான்ஸ்ஃபார்மர் மேபுறத்தில் உள்ளது. சம்பவ சமயம் இருட்டாக இருந்தது என்றால் சரிதான். சைக்கிளில் வந்தவர் கீழே விழுந்து சத்தம் கேட்டு பின்பு தான் நான் பார்த்தேன் என்றால் சரிதான். அவர் சைக்கிளில் ரோட்டை கடக்க சென்று கொண்டிருந்த பொழுதும் பார்த்தேன்.

2. இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபருக்கும் அதிக அளவில் அடிப்பட்டது என்றால் சரியல்ல. புகாரை யார் எழுதினார்கள் என்றால் போலீசார் எழுதினார்கள். லாரன்ஸ் அவர்கள் இறந்த விபரம் எனக்கு எப்பொழுது தெரியும் என்றால் அதிகாலை 3 மணி அளவில் தெரியும். லாரன்ஸ் எனது தங்கையின் கணவர். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் லாரன்ஸ் எனது தங்கையின் கணவர் என்பதால் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் எழுதிய புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது என எனக்கு தெரியுமா என்றால் போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் சொன்னதை புகாராக எழுதினார்கள். இருசக்கர வாகனத்தில் வந்த நபர்களுக்கு என்ன நடந்தது என கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் ஒரு நபர் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டு சென்றதாகவும் இரண்டு நபர்கள் சிகிச்சையில் அன்றைய தினம் முன்னதாக சேர்ந்ததாகவும் தெரிந்து கொண்டேன்.

3. என் தங்கையின் கணவர் லாரன்ஸ் திடீரென சைக்கிளில் ரோட்டை திரும்பியதால் தான் மேற்படி விபத்து சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல. லாரன்ஸ் பின்னால் வரும் வாகனத்தை

பார்த்து திரும்பி இருந்தால் சம்பவ விபத்து ஏற்பட்டு இருக்காது என்றால் சரியல்ல, அவர் பார்த்து தான் சென்றார். சம்பவ விபத்து லாரன்ஸ் அவர்களின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.04 19:46:51 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**